செ.வெ.எண்: 27 நாள்: 14.09.2016

**புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் சுமார் ரூ.19.34 இலட்சம் மதிப்பில் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டம், கிளிக்குடி கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்று 236 பயனாளிகளுக்கு ரூ.19,34,419/- மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இம்முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசியதாவது:

தமிழக அரசு பொதுமக்களிடமிருந்து குறைகளை மனுக்களாக பெற்று தீர்வுகாணும் நோக்கத்தில் மாதந்தோறும் ஒரு கிராமத்தை தேர்வு செய்து மக்கள் தொடர்பு முகாம் மாவட்ட நிர்வாகம் சார்பில் நடத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் இலுப்பூர் வட்டம், கிளிக்குடி கிராமத்தில் இன்று (14.09.2016) மக்கள் தொடர்பு முகாம் நடத்தப்பட்டது. இம்முகாமில் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 150 மனுக்களின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்பொருட்டு சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும், இம்முகாமிற்காக பெறப்பட்ட 76 முன் மனுக்களில், 76 மனுக்களும் ஏற்கப்பட்டு தீர்வு காணப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 6வது முறையாக முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன் தேர்தல் வாக்குறுதியில் தெரிவித்த அனைத்து வீடுகளுக்கும் 100 யூனிட் வரை இலவச மின்சாரம், திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ் திருமாங்கல்யத்திற்கு வழங்கப்பட்ட தங்கம் 4 கிராமிலிருந்து 8 கிராமாக உயர்வு, சிறு, குறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவையிலுள்ள விவசாயக்கடன் தள்ளுபடி, கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரம் 200 யூனிட்களாகவும், விசைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரம் 750 யூனிட்களாகவும் உயர்வு, டாஸ்மாக் கடைகளின் விற்பனை நேரம் குறைப்பு மற்றும் 500 டாஸ்மாக் கடைகள் மூடல் உள்ளிட்ட 5 முக்கிய திட்டங்களை கையொப்பமிட்டு உடனடியாக நிறைவேற்றி உள்ளார்கள். மேலும் தமிழகஅரசு அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. இப்பகுதி பொதுமக்களின் கோரிக்கையான பேருந்து வசதி, சாலை வசதி, குடிநீர் வசதி, முதியோர் உதவித்தொகை போன்ற பல்வேறு கோரிக்கைகள் நிறைவேற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும் இம்முகாமில் வருவாய்த்துறையின் சார்பில் 25 பயனாளிகளுக்கு ரூ.3 இலட்சம் மதிப்பில் முதியோர் உதவித்தொகைக்கான காசோலைகளும், முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் 6 பயனாளிகளுக்கு ரூ.63500 மதிப்பில் திருமண உதவித்தொகை மற்றும் இறப்பு நிவாரண உதவித்தொகைக்கான காசோலைகளும், 46 பயனாளிகளுக்கு ரூ.11,89,000/- மதிப்பில் விலையில்லா வீட்டு மனைப்பட்டாக்களும், 99 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளும், 28 பயனாளிகளுக்கு பட்டா மாறுதல் ஆணைகளும், வேளாண்மைத்துறையின் சார்பில் தேசிய உணவு பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் 5 பயனாளிகளுக்கு மானிய விலையில் ரூ.3000 மதிப்பில் கைத்தெளிப்பான்களும், 3 பயனாளிகளுக்கு ரூ.9000 மதிப்பில் விசைத்தெளிப்பான்களும், தேசிய வேளாண் வளர்ச்சித்திட்டத்தின் கீழ் 2 பயனாளிகளுக்கு ரூ.154 மதிப்பில் 10 கிலோ நெல் நுண்ணூட்ட விதைகளும், 1 பயனாளிக்கு ரூ.200 மதிப்பில் 8 கிலோ உளுந்து விதைகளும், 3 பயனாளிகளுக்கு ரூ.225 மதிப்பில் சிறுதானிய விதைகளும், தோட்டக்கலைத்துறையின் சார்பில் தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின் கீழ் 2 பயனாளிகளுக்கு மானிய விலையில் ரூ.9840 மதிப்பில் மென்தண்டு ஒட்டுக்களும், 2 பயனாளிகளுக்கு ரூ.16000 மதிப்பில் குழித்தட்டு நாற்றுக்களும், புதுவாழ்வுத்திட்டத்தின் சார்பில் 8 மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு தலா ரூ.40000 என மொத்தம் ரூ.3.20 இலட்சம் மதிப்பில் மாடு வளர்ப்பிற்கு நிதியுதவி தொகைக்கான காசோலைகளும், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் 5 பயனாளிகளுக்கு தலா ரூ.3700 என மொத்தம் ரூ.18500 மதிப்பில் விலையில்லா தையல் இயந்திரங்களும், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 1 பயனாளிக்கு ரூ.5000 மதிப்பில் காதுக்கு பின் பொருத்தும் காதொலிக்கருவியும், என மொத்தம் 236 பயனாளிகளுக்கு ரூ.1934419 மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

..2..

இம்முகாமில் வேளாண்மைத்துறை, சமூகநலத்துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம், புதுவாழ்வுத்திட்டம், கால்நடைபராமரிப்புத்துறை, பொதுசுகாதாரத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, தோட்டக்கலைத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை ஆகிய துறைகளின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள், செயல்பாடுகள் மற்றும் தகுதிகள் குறித்து அலுவலர்கள் திட்ட விளக்கவுரையாற்றினார்கள்.

மேலும் பரம்பூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் சார்பில் அமைக்கப்பட்டிருந்த சிறப்பு மருத்துவ முகாமில் 174 புறநோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டதுடன், 236 நபர்களுக்கு நிலவேம்பு குடிநீர் வழங்கப்பட்டது. 3 மாற்றுத்திறனாளிகளுக்கு நடமாடும் சிகிச்சை பிரிவு வாகனம் மூலம் தசைப்பயிற்சி சிகிச்சை அளிக்கப்பட்டதுடன், 2 மாற்றுத்திறனாளிகளுக்கு வங்கிக்கடன் ஆலோசனை மற்றும் 2 மாற்றுத்திறனாளிகளுக்கு ஊனமுற்றோர் உதவித்தொகைக்கான விண்ணப்பமும் வழங்கப்பட்டது. மேலும், கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் 1032 கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம், ஆண்மை நீக்கம், தடுப்பூசி, செயற்கைமுறை கருவூட்டல் மற்றும் பிற சிகிச்சைகளும், சிறந்த முறையில் கால்நடைகளை வளர்த்த 3 நபர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டது.

முன்னதாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தமிழ்நாடு உப்பு நிறுவனம், பொது சுகாதாரத்துறை, புதுவாழ்வுத்திட்டம், சமூகநலத்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்டம், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மற்றும் கால்நடைபராமரிப்புத்துறை மூலம் அமைக்கப்பட்டிருந்த அரங்குகளில் அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த கண்காட்சியை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கிளிக்குடியில் தேர்தல் பிரிவின் மூலம் விராலிமலை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்காளர்கள் பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்டிருந்த வாக்காளர் பட்டியல் சிறப்பு முகாமினை பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் மரக்கன்றினை நட்டார்.

இம்முகாமில் மாவட்ட வருவாய் அலுவலர் (தேசிய நிலம் எடுப்பு) திருமதி.மீராபரமேஸ்வரி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.சந்தோஷ்குமார், வேளாண் இணை இயக்குநர் திரு.அண்ணாமலை, கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் திரு.சதாசிவம், இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.மு.வடிவேல்பிரபு, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.மனோகரன், மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி.பஞ்சவர்ணம், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திரு.அன்பழகன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.சிதம்பரம், துணை இயக்குநர் (பொது சுகாதாரம்) மரு.பரணீதரன், மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி.ரேணுகா, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.சரவணக்குமார், மாவட்ட திட்ட மேலாளர் (ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப்பணிகள்) திருமதி.சிறியபுஷ்பமணிமேகலை, தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் திரு.அருணாச்சலம், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி.சாந்தி, உதவி ஆணையர் (கலால்) திருமதி.ஜெயபாரதி, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) திருமதி.சூரியகலா, மாவட்ட திட்ட மேலாளர் (புதுவாழ்வுத்திட்டம்) திருமதி.வசுமதி, ஒன்றியக்குழுத்தலைவர் திருமதி.இளவரசிவசந்தன், வட்டாட்சியர் திரு.தமிழ்மணி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.பாஸ்கர், திரு.ராமச்சந்திரன், ஊராட்சி மன்றத்தலைவர் திருமதி.கவிதாசக்தி, உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**